### இந்தியாவிலேயே

# இரட்டை இலக்க வளர்ச்சியை எட்டியுள்ளது தமிழ்நாட்டின் திராவிட மாடல் அரசு!

## சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!



சென்னை, ஆக. 7 -

தமிழ்நாடு இந்தியாவிலேயே இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தை எட்டியுள்ளது குறித்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**இந்தியாவிலேயே இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தை எட்டிக் காட்டியுள்ள ஒரே அரசு தமிழ்நாட்டின் திராவிட மாடல் அரசு!**

**இந்தியாவிலேயே அதிகபட்சமாக 9.69% பொருளாதார வளர்ச்சியுடன் தமிழ்நாடு முதலிடம் என்று கூறி வந்தோம் அல்லவா...**

**அதையும் தாண்டி, தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதம் 11.19% என ஒன்றிய அரசின் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் வெளியாகியுள்ளது!**

**இதற்கு முன்பு, இரட்டை இலக்க வளர்ச்சி எட்டப்பட்டது 2010-11 ஆம் ஆண்டில். அப்போது கலைஞர் ஆட்சி! இப்போது கலைஞர் வழி நடக்கும் திராவிட மாடல் ஆட்சி! இரண்டுமே கழக ஆட்சி!**

**2030ஆம் ஆண்டுக்குள் One Trillion Dollar பொருளாதாரம் என்ற போது பலரது புருவமும் உயர்ந்தது. "இது மிக உயர்ந்த இலக்கு, எப்படி சாத்தியமாகும்?" என்றார்கள்! இதே வேகத்தில் சென்றால், எதுவும் சாத்தியம் என்பது இப்போது மெய்ப்பிக்கப் பட்டு விட்டது!**

**எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின் (குறள் 666)**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

### கடலூர் கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில்

# கலைஞரின் 7ம் ஆண்டு நினைவு நாள் அமைதிப் பேரணி!

## மாவட்டக் கூட்டத் தீர்மானம்; மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



*கடலூர், ஆக. 7 -*

*கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம்,05.08.2025, செவ்வாய்க்கிழமை, மாலை 5.30 மணியளவில், காணொளி காட்சி மூலமாக, கழக தேர்தல் பணிக் குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது.*

*கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., தொகுதி பார்வையாளர்கள் ஏ.அங்கையற்கண்ணி, விஜயன்ராம கிருஷ்ணன், சுவை.சுரேஷ், எம்.எம்.சிவா,அ.பாரிபாலன், முன்னாள் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரை யாற்றினார்.*

*இக்கூட்டத்தில், இன்று (7ம் தேதி) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, கடலூர் கிழக்கு மாவட்ட கழகம் சார்பில் மாநகரம்,ஒன்றியம்,நகரம்,பேரூர்,வட்டம்,வார்டு,கிளை கழகங்களில் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்தும், மலர் தூவி மரியாதை செலுத்தியும், அமைதிப் பேரணியாகச் சென்று ஏழை, எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிட வேண்டும்.*

*கடலூர் கிழக்கு மாவட்டத்தில் 5 சட்டமன்ற தொகுதி, 1284 பூத்களில் 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற கழக தலைவர் அவர்களின் அறிவிப்பினை அமல்படுத்தும் விதமாக இல்லங்கள்தோறும் கழக நிர்வாகிகள் சென்று பொது மக்களை சந்தித்து, கழகத்தில் 60 சதவீதம் புதிய உறுப்பினர்களை, கூடுதல் வேகத்துடன் சேர்த்திடல் வேண்டும். உங்களுடன் ஸ்டாலின், நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு உயர் மருத்துவ சிகிச்சை ஆகிய மக்கள் திட்டப்பணிகளை சிறப்பாக செய்திட வேண்டும்.*

*என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டன.*

*இந்நிகழ்வில் மாவட்ட கழக துணை செயலாளர்கள் அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், சுதாசம்பத், மேயர் சுந்தரி ராஜா, ஒன்றிய கழக செயலாளர்கள்: அ.முத்துசாமி, த.ஜெயபாண்டியன், வி.சிவக்குமார், ஆர்.நாராயணசாமி, தங்க.ஆனந்தன், கே.ஆர்.கோவிந்தராஜ், எஸ்.செந்தில்குமார்,தெ.காசிராஜன், பி.சுப்பிரமணியன், கே.ஆர்.தனஞ்செயன், ஆர்.விஜயசுந்தரம், ஏ.எஸ்.மதியழகன், ஏ.எம்.மதியழகன், வெற்றிவேலு , வி.ஜி.பி.சபாநாயகம், டி.திருமூர்த்தி,வி.பி.பாலு, பா.திருமாவளவன்,*

*கே.ஆர்.ராயர், பி.சுந்தர பாண்டியன், முத்துபெருமாள், ஆர்.கலையரசன், எம்.மனோகரன், த.சங்கர், ஆர்.ராஜேந்திரன், கே.நடராஜன், ம.சோழன், வி.கோவிந்தசாமி, கே.மகேஷ்,*

*கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா, கடலூர் பகுதி செயலாளர்கள்: ப.நடராஜன், பா.வெங்கடேஷ், எஸ்.சலீம், மு.இளைய ராஜா, நகர கழக செயலாளர்கள் கே.ஆர்.செந்தில் குமார், த.தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ்.சிவக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: கிள்ளை ரவிச்சந்திரன், வ.ஞானசேகரன், வே.விக்கிரமன், பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர்.பாலமுருகன், த.ஜேம்ஸ்.விஜயராகவன், எம்.ஆர்.சண்முகம், இரா.தமிழரசன், ச.கல்யாணசுந்தரம், மு.வெற்றிவேல், என்.டி.கணேசன், மஞ்சு, பா.கோதண்டபாணி, பேரூர் செயலாளர்கள்: எஸ்.கணேசமூர்த்தி, கு.வே.ப.ஜெய்சங்கர், ப.மனோகரன், பூ.செல்வகுமார், க.பழனி, எம்.அன்வர்சதாத், பேரூராட்சி தலைவர் தேன்மொழி சங்கர், மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: மாணவரணி அமைப்பாளர் அப்பு ஆர்.சந்தியநாராயணன், பொறியாளர் அணி அப்புசந்திரசேகரன், தொண்டரணி ஆராமுது, விவசாய அணி பொன்.பன்னீர்செல்வம், விவசாய தொழிலாளர் அணி ம.இராமசாமி, மகளிர் அணி த.அமுதராணி, மகளிர் தொண்டரணி, ப.மனோரஞ்சிதம், வழக்கறிஞர் அணி பி.அருள் ஜோதி, ஆதிதிராவிடர் நலக்குழு ஆர்.பரந்தாமன், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு எம்.எஸ்.முகமது யூனூஸ், வர்த்தகர் அணி ஆர்.ரெங்கநாதன், தொ.மு.ச. பி.பழனிவேல்,*

*தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஜாபர் அலி, விளையாட்டு மேம்பாட்டு அணி பூ.சதீஷ்குமார், மீனவர் அணி வீ.செல்வபாரதி, அயலக அணி வாசு, தொழிலாளர் அணி கி.தண்டபாணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி தாணூர் சிவக்கொழுந்து, இலக்கிய அணி பழனிசாமி, டி.வெங்கடாஜலபதி, கலை இலக்கிய பிரிவு, ஜி.சின்னமணி, இளைஞரணி துணை அமைப்பாளர்கள் குட்டி மணி,மணிகண்டன்,பிரபு, தமிழ், முத்துகுமார்,தகவல் தொழில்நுட்ப அணி அ.முத்தமிழ்செல்வன், வி.எம்.வெற்றிசெல்வன், ப.பிரவீன்குமார் உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.*

---

### தூத்துக்குடி வடக்கு மாவட்டம் முழுவதும்

# முத்தமிழறிஞர் கலைஞரின் 7ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை!



*தூத்துக்குடி, ஆக. 7 -*

*ஆகஸ்ட் 7 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு தினம். தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் அமைதி ஊர்வலம் மற்றும் மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து வார்டு, கிளைக்கழகங்கள் தோறும் மலர் அஞ்சலி செலுத்துவீர் என தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் திருமதி.பி.கீதா ஜீவன் அறிக்கை வருமாறு:*

*தி.மு.கழகத்தை தோற்றுவித்த பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்கு பின் இந்த இயக்கத்தை கட்டி காத்து 5 முறை தமிழக முதல்வராக இருந்து தமிழகத்தை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு சென்றவர் முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார்.*

*நவீன தமிழகத்தின் சிற்பி என போற்றப்படும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தன்னுடைய கடைசி காலம் வரை தமிழ், தமிழர் நலன், சமத்துவம், சமூக நீதி என்று பாடுபட்டவர். அவர் நம்மைவிட்டுச் சென்றாலும் அவர் காட்டிய வழியில் கொள்கையில் உறுதியோடு தி.மு.கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் இயக்கத்தை வழி நடத்தி வருகிறார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 வது நினைவு தினம் இன்று (ஆகஸ்ட் 7) காலை 7.00 மணி அளவில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தூத்துக்குடி V.V.D மெயின் ரோடு, டூவிபுரம் 5 வது தெரு அண்ணா நகர் 7 வது தெரு சந்திப்பில் இருந்து மாவட்ட செயலாளராகிய (P.கீதாஜீவன்) என்னுடைய தலைமையில், 4 வது இரயில்வே கேட், குறிஞ்சி நகர் வழியாக ஊர்வலமாக சென்று மாவட்ட தி.மு.க அலுவலகமான கலைஞர் அரங்கம் முன்பு அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட இருக்கிறது.*

*இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், கிளைக்கழக செயலாளர்கள், நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக தொண்டர்கள் அனைவரும் பெருந்திரளாகக் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.*

*அதுபோல தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், கிளைக்கழகங்கள், வார்டுகள் தோறும் அவரது திருவுருவப் படத்தை வைத்து அஞ்சலி செலுத்த கேட்டுக் கொள்கிறேன். அந்தந்த பகுதிகளில் நடைபெறும் மலர் அஞ்சலி நிகழ்ச்சியில் அந்தந்த பகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் தொண்டர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*

---

# நமது நினைவெலாம் கலைஞரே அன்றோ!



இன்று (7.8.2025) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாவது ஆண்டு நினைவு நாள்! உலகத் தமிழர்கள் அனைவரும் உறக்கம் தெளிந்து, எழுச்சி பெற்று ஏற்றம் பெறவும், தாயகமாம் தமிழ்நாட்டை, தம்சிந்தனை சொல் செயல் கொண்டு,கண்ணையும் கருத்தையும் கவரும் சீரிய சிற்பமாகச் செதுக்கிடவும், ஓய்வே இன்றி உழைத்த உத்தமராம் கலைஞரின் ஏழாவது ஆண்டு நினைவுநாள்!

திராவிடராகிய நம்மால், கலைஞரை மறக்க முடியுமா? **"நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு மறக்கத் தெரியாதா"**என்று பாடினார் கவியரசர் கண்ணதாசன். நமக்கு, கலைஞரை என்றும் நினைக்க மட்டுமே தெரியும், ஒரு கணமேனும் மறந்திடக் கூடுமோ! எதைப் படித்தாலும்,எதைக் கேட்டாலும், அவரது நினைவன்றோ நமக்குள் மையம் கொண்டு, நம்மை ஆட்கொள்ளுகின்றது!

**நினைவுகள் என்பது நாம் நம்முடன் எடுத்துச் செல்லும் நாட் குறிப்பு ( Memory is the diary that we all carry about with us) என்று ஆங்கிலக் கவிஞர் ஆஸ்கர் ஒயில்டு குறிப்பிட்டிருக்கிறார். திராவிட இயக்கத்திலுள்ள நம்மைப் பொறுத்தவரை, கலைஞரைப் பற்றிய நினைவுகளே, நம் வாழ்க்கையின் நாட்குறிப்புகளாக மட்டுமின்றி, நம்மை வழி நடத்தும் துருவ நட்சத்திரங்களும் ஆகும்; அவை தான் நமது பாதையைத் தெளிவாக்கி, பயணத்தைத் தீர்மானிக்கும் ஒளியாகும்.கலைஞரைப் பற்றிய நம் நினைவுகள், கண்ணுக்குள் காட்சிகளாக விரிபவை, அவை நம் இதயத்தின் துடிப்புகள் - இதயத்தின் விலை மதிப்பற்ற கருவூலங்கள், வைரங்கள். நமக்குக் கலைஞரைப் பற்றிய நினைவுகள் காலத்தின் தேவை, இன்றைய நமது நம்பிக்கைகளுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் நனி சிறந்த ஊட்டச் சத்து அவை.**

1938 - ஆம் ஆண்டு 14 வயது பால பருவத்திலேயே, திருவாரூர்த் தெருக்களில், நாள் தோறும் கையில் தமிழ்க் கொடி ஏந்தி, மாணவர் ஊர்வலம் நடத்தி, **"வாருங்கள் எல்லோரும் போருக்குச் சென்றிடுவோம்! வந்திருக்கும் இந்திப் பேயை விரட்டித் திருப்பிடுவோம்"** என்று என்றைக்குக் குரல் எழுப்பினாரோ, அன்று முதலே அவரது அரசியல் வாழ்க்கை ஆரம்பமாகி விட்டது.அது 80 ஆண்டுகள், இறுதிவரை எதற்கும் அஞ்சாத நெஞ்சினராக, போராளியாக நீடித்தது( Started as a Fighter and lasted as such till the end ). அது மட்டுமல்ல, அப்போதே அவருள் துடிக்கத் தொடங்கிய கவிதை உணர்ச்சி ( Powerful Poetic Emotions ) கடைசி வரை விறுவிறுப்பாக வளர்ந்து மேலோங்கியது.

15 வயதிலேயே **'மாணவ நேசன்'** எனும் கையெழுத்து ஏடு, அடுத்து **'முரசொலி'** துண்டு வெளியீடு எனத் தொடங்கியதுதான், கலைஞரின் பத்திரிகை வாழ்க்கை (Life as a Journalist). அது இறுதி மூச்சுவரை துவளாமல் இயங்கியது. அந்த வாழ்க்கையிலும், **"தென்றலைத் தீண்டியதில்லை, தீயைத் தாண்டியிருக்கிறேன்"** என்பதற்கேற்ப, எத்தனையோ சோதனைகளைச் சந்தித்தே வந்திருக்கிறார்.

கலைஞர் 15 வயதில் காதில் வாங்கிக் கொண்ட **"சுதந்திரம் - சமாதானம் - சமத்துவம்"** என்ற சுடர்விடும் சொற்கள், அவருக்குள்ளே சாத்தியப் படுத்தக் கூடிய சித்தாந்தப் பரிமாணங்களைப் பக்குவமாக ஊன்றி வைத்தன. அவற்றின் வெளிப்பாடுதான், அவர் முதலமைச்சராக இருந்த போது நடைமுறைப்படுத்திய திட்டங்கள்.

தொழுநோய் இரவலர் மறுவாழ்வுத் திட்டம், கைம்பெண்கள் மறுவாழ்வுத் திட்டம், கை ரிக்‌ஷாக்களை ஒழித்து இலவசமாக சைக்கிள் ரிக்‌ஷாக்கள் வழங்கும் திட்டம், மிகப் பிற்படுத்தப்பட்டோர்க்குத் தனி இட ஒதுக்கீடு, குடிமனை அனுபோகதாரர் சட்டம், குடும்பச் சொத்தில் பெண்களுக்குச் சம பங்குரிமை என எண்ணற்ற திட்டங்களை வரிசைப் படுத்திச் சொல்லிக் கொண்டே போகலாம்.

**கலைஞர்,செயலாக்கத்திற்கு அறிமுகம் செய்த திட்டங்களுள், அடிக்கோடிட்டுச் சொல்ல வேண்டியது,இந்திய சுதந்திரப் பொன்விழாவினை யொட்டிச் செயல்படுத்திய 'பெரியார் நினைவு சமத்துவபுரம்' திட்டமாகும். விவேகம் எனும் வெள்ளி முளைத்து, சாதி சமயப் பிணக்குகள் எனும் சனி தொலைந்தால்தான், சமுதாய மக்களிடையே நல்லிணக்கம் - சமத்துவம் எனும் ஞாயிறு தோன்றும் என்ற உறுதியுடன் அந்தத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.**

17 வயதிலேயே **'தமிழ் மாணவர் மன்றம்'** என்ற அமைப்பைத் தோற்றுவித்தார்.1942ல் மன்றத்தின் ஆண்டு விழாவினை,

**"கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக் கூட்டம் !**

**கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக் கூட்டத்தை"** என்று பாவேந்தர் பாரதிதாசனார் உணர்ச்சி ததும்பிடப் போற்றும் வண்ணம் நடத்தினார்.இதற்கிடையே தஞ்சை மாவட்டத்திலும், பிற மாவட்டங்களிலும் தமிழ் மாணவர் மன்றங்களை நிறுவிடப் பணியாற்றினார் கலைஞர்.இயல்பிலேயே வாய்த்திடப் பெற்ற அந்த அரிய அமைப்புத் திறன்தான் (Organising Talent) வளர்ந்து வனப்புற்று, இயக்கத்தில் பல்வேறு உயர்ந்த பொறுப்புகள் அவரை நாடி வரச்செய்தது.

நாடகத்தில்தான் தொடங்கியது கலைஞரின் கலை வாழ்க்கை ( Life as an artiste ).**'நச்சுக் கோப்பை'** என்ற நாடகமே, கலைஞர் எழுதி நடித்த முதல் நாடகம். அவரது 19 வயதில் 1943ல் அரங்கேற்றப்பட்டது.திராவிட இயக்கத்தின் கொள்கை முழக்கமாக அமைந்திருந்தது இந்த நாடகம். சோதிட மறுப்பு, கைம்மைத் திருமணம், சாதி வேறுபாடின்மை, பகுத்தறிவு போன்ற உயர்ந்த இலட்சியங்கள் இடம் பெற்றிருந்தன.

**"ஏ பணமே! பகல் இரவு என்று பாராது பாடுபட்டுப் பசி பசி என்று ஏங்கி நடுநிசியிலே நின்றாலும், இதோ கொஞ்சம் புசி புசி என்று கூறிடாத இரும்பு நெஞ்சரின் இரும்புப் பெட்டியில் தூங்கும் பணமே ! குச்சி வீட்டில் ஏழை உணவின்றி ஒய்ந்து கிடக்கவும், மச்சு வீட்டில் பணக்காரர்கள் மதுரகீதம் பாடவும் பாழும் நிலையை உண்டாக்கிய பணமே ! உலகத்தின் உயிரே! இன்னும் எத்தனை நாளைக்கு இந்தச் சோம்பேறிகளின் வீட்டில் வாழப் போகிறாய்? வரப் போகிறது பாட்டாளியின் படையெடுப்பு!"** என்று 19 வயதில் கலைஞர் எழுதிய எரி நெருப்பு வசனத்தைப் படித்தாலும், பக்கம் நின்று கேட்டாலும், நம் நினைவிலே சூடு தணியாமல் என்றும் நிற்கும்தானே !

தமிழ்நாட்டின் முக்கிய சமுதாயங்களை நினைவு படுத்திப்போற்றிடும் வகையில் கலைஞரால் பொன்னிழை கொண்டு நெய்யப் பட்டவையே, **தென் பாண்டிச் சிங்கம், பொன்னர் சங்கர், பாயும்புலி பண்டாரக வன்னியன்** எனும் மூன்று வரலாற்று நெடுங் கதைகள். தமிழ்ச் சமூகத்தின் மறுமலர்ச்சிக்காகவும், புத்தெழுச்சிக்காகவும் அவற்றைப் படைத்தார்.

**"புலிப் போத்து மறவர்களே! நீங்கள் பிளவு படாதிருந்தால் அயலவர் நம்மை ஆண்டிடவும்,தமிழர் பலர் அடிமையாகி மாண்டிடவும் நேர்ந்திருக்குமா?"** என்ற வினாவை முக்குலத்தின் எஃகு நெஞ்சில் எழுதிட கலைஞர் முற்பட்டதனால் விளைந்தது 'தென்பாண்டிச் சிங்கம்'.

**கொங்கு மக்களிடையே, பொன்னர் சங்கர் கதை என்றும், அண்ணன்மார் சாமி கதை என்றும் உலவிக் கொண்டிருந்த புராணத் தன்மையுள்ள நாட்டுப்புறக் கதையைக் கருவாக வைத்து, ' பொன்னர் சங்கர் ' என்ற வீர வரலாற்றைப் படைத்திருக்கிறார் கலைஞர்.**

தமிழ் ஈழத்தின் வன்னிப் பகுதியில் வெள்ளையரை எதிர்த்து வீர முழக்கமிட்ட மாவீரன் பண்டாரக வன்னியனுக்கு, இலங்கைத் தமிழர் சிலை நிறுவிப் போற்றினர்.அந்த விழாவுக்கு வாழ்த்து அனுப்பிய கலைஞர், '**கற்சிலை அங்கே கண்டனர், நான் சொற்சிலை இங்கே காண்கிறேன்**' என்று சொல்லிவிட்டு, உருவாக்கிய உன்னதப் படைப்பே ' பாயும் புலி பண்டாரக வன்னியன்'.

கலைஞரின் இந்த மூன்று உரைநடைக் காவியங்களையும், எழிலோவியக் காட்சிகளையும், **'ரோமாபுரிப் பாண்டியன்'** எனும் நெடுங்கதையையும், எளிதில் நம் நெஞ்சத்தின் ஓரத்திலேயே எப்போதும் நிறுத்திவிட முடியுமா ?

**"நான் எட்டாத பழம்"** என்ற ராஜகுமாரியிடம், ஒருதலைக் காதல் கொண்ட ஆலகாலன், **"வெட்டும் கத்தி நான்"** என்று பதில் சொல்ல, **"வைரக் கத்தியாகவே இருக்கலாம்.அதற்காக வயிற்றில் குத்திக் கொள்ள மாட்டார்கள்"** என்ற **'ராஜகுமாரி'** முதல் திரைப்பட வசனத்திலிருந்து தொடங்கி; அபிமன்யு, மந்திரி குமாரி, பராசக்தி, மனோகரா உள்ளிட்ட கலைஞர் எழுதிய, 75க்கும் மேலான திரைப்படங்களின் வசனங்களும்;

**"உயர்வு தாழ்வு என்ற மனப்பான்மை மனிதனோடு இயற்கையாகப் பிறப்பதல்ல.எல்லா வர்க்கத்தினரையும் சேர்ந்த இளைய தலைமுறையினர் நினைத்தால் ஒரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவது எளிதான காரியமாகும்"**என்ற மு.க.ஸ்டாலின் நந்தகுமாராக நடித்த **'ஒரே ரத்தம்'** திரைப்படத்தின் கடைசி உரையும்;

**"பிறர்க்காக வாழும் நல்லிதயம் கொண்டவர்களாகத் தங்களை ஆக்கிக் கொண்டவர்களே எம்மைச் சேர்ந்தவர்கள்"** என்று மதத்தில் **புரட்சி செய்த மகான் இராமானுஜர்** கூறுவதாக, கலைஞர் அமைத்திருக்கும் நல்லுரையும்; நம்மில் யாரும் மறக்கக் கூடியவை அல்ல.

கலைஞரின் எழுத்தும்,பேச்சும்,நிர்வாகத் திட்டச்செயல்பாடுகளும், இயக்கத்தின் சித்தாந்தங்களை அடிப்படையாகக் கொண்டும், கலை இலக்கிய நயத்துடன் அவற்றைப் பொது மக்களுக்கு எடுத்துச் செல்லும் வகையிலும் இருந்தன என்பது, நமது நினைவில் என்றைக்கும் எதிரொலித்துக் கொண்டே இருக்கும்!

**இன்றைய 'திராவிட மாடல்' ஆட்சியின் தலைவர், திராவிடச் செம்மல் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஓய்வறியாத உழைப்பின் நீண்ட நெடிய பயணமும், திட்டங்களின் நேர்த்தியும், செயல் ஊக்கமும், கட்சியின் மீதும், கட்சியினர் மீதும் அவர் கொண்டுள்ள கவனமும், காட்டும் அக்கறையும்,அவர் கலைஞரின் நீட்சி என்று மெய்ப்பித்து வருவதை மறக்க முடியுமா!**

• • •

**கி.இராஜமாணிக்கம்**

• • •